அருட்பெருந்திரு நாராயணகுரு அடிகளாரின் தேவாரப் பாடல்கள்

குறிப்புரை
டாக்டர். மா, இளையபெருமாள்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

1977

அருட்பெருந்திரு
நாராயணகுரு அடிகளாரின்
தேவாரப் பாடல்கள்

குறிப்புரை

டாக்டர். மா, இளையபெருமாள்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ்த்துறைத் தலைவர்,
கேரளப் பல்கலைக்கழகம்,
காரியவட்டம், திருவனந்தபுரம்.

1977

ARUT PERUNTHIRU NARAYANAGURU ADIKALARIN THEVARAP PADALKAL

With commentary in Tamil by
Dr. M. ELAYAPERUMAL, M. A., M. Litt., Ph. D.,
Head of the Dept. of Tamil,
University of Kerala,
Kariavattom, Trivandrum.

First Edition : November 1977

Price : Rs. 4.00.

Available at :
Jayakumari Stores,
Court Road,
Nagercoil.

Printed at :
Kerala University Co-operative Stores Press,
Trivandrum-1.

அருட் பெருந்திரு நாராயணகுரு அடிகளாரின் தேவாரப் பாடல்கள்

முன்னுரை

கேரளத்தில் தோன்றிய அருட் பெருந்திரு நாராயண குரு அடிகளாரும் தமிழகத்தில் தோன்றிய அருட் பெருந்திரு இராமலிங்க அடிகளாரும் சம காலத்தவர்கள். இருவரது வாழ்க்கையிலும் வாழ்வின் நோக்கங்களிலும் ஒற்றுமைகள் பல காணக் கிடக்கின்றன. இருவரும் திருமணம் நிகழ்ந்த அன்றே இல்வாழ்வைத் துறந்தவர்கள்; நிலைக்கண்ணாடியில் இறைவனைக்கண்டு வழிபட்டவர்கள். இராமலிங்க அடிகள் சுத்த சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பியது போன்று நாராயணகுரு அடிகளாரும் ''ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் மனிதனுக்கு'' என்ற நெறியைப் பரப்பியவர். எனவே நாராயணகுரு அடிகளாரைக் ''கேரளத்து வள்ளலார்'' எனப் பாராட்டுவது முற்றிலும் பொருத்தமாகும்.

''உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொன்றை உருவாக்கப் பிறக்கின்றான்'' எனத் தனது பிறப்பின்பயனை உணர்ந்தவராய், ''நீங்கள் உங்கள் வழியில் செல்லுங்கள், நான் என் வழியில் செல்கிறேன்'' எனக் கூறி உறவின் தளையினின்றும் தன்னை விடுவித்து, நாடெங்கும் அலைந்து திரிந்து சமுதாயத் தளைகளை உணர்ந்து அவற்றினின்றும்

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை விடுவித்தவர் தவத்திரு நாராயணகுரு சுவாமிகள்.

1854-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபதாம் நாள் சதய நட்சத்திரத்தில் திருவனந்தபுரத்தின் அண்மையி லுள்ள செம்பழந்தி என்னுமிடத்தில் "வயல்வாரத்து" என்ற வீட்டில் நாராயணகுரு பிறந்தார். தந்தை மாடன் ஆசான்; தாய் குட்டியம்மா. பெற்றேருக்கு அவர் ஒரே மகன்.

"மனிதனின் சலனங்கள் வெளியே பிரதிபலிக்கக் கூடாது" என்னும் தத்துவத்தை சுவாமிகள் பிறந்த அன்று முழுவதும் அழாத நிலையில் உணர்த்தினர்.

சுவாமிகள், தனது ஐந்தாவது வயதில் செம்பழந்தி யில் நாராயணஞசான் என்பவரிடம் ஆரம்பக் கல்வி கற்றூர். பின்னர்க் கருநாகப்பள்ளியில் இராமன்பிள்ளை ஆசான் என்ற வடமொழிப் பண்டிதரிடம் கல்வி கற்றூர். அவரால் சிறந்ததொரு வடமொழிப் பண்டிதனுக உரு வாக்கப் பட்டார்.

கருநாகப்பள்ளியிலிருந்து திரும்பிய பின்னரே சுவா மிகள் தமிழ்மொழி கற்றூர். அதுவும் திருவனந்தபுரத்தில் தங்கியிருந்த காலத்தில் அரிய பல இலக்கியங்கள் கற்றூர் என சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள் எழுதும் பல ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். திருவனந்தபுரத்தில் சாலையில் புத்தகக்கடை வைத்திருந்த ஒரு தமிழன்பரின் நட்பு பூண்டு, அவர் இல்லாத வேளையில் கடையை மேற் பார்த்து வந்தார். இவ்வாறு தனக்குத் தானே குருவாக அமைந்து தமிழ் மொழி கற்றதோடு, "நன்னூல், மணி மேகலை, சிலப்பதிகாரம், தேம்பாவணி, திருக்குறள்,

தேவாரம், திருவாசகம், சித்தர் பாடல்கள்'' ஆகியவற்றைப் படித்தார் எனத் திரு. பி. பரமேசுவரன் அவர்களும் திரு. மூர்க்கோத்து குமாரன் அவர்களும் கூறுகின்றனர். சுவாமிகளின் தேவாரப்பாடல்கள் சிவசதகம், ஆத்மோபதேச சதகம் போன்ற படைப்புக்கள் மேற்கூறிய கூற்றிற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. ''கத்யச்சீனி'' எனும் வடமொழிப் பாடலைத் தனித்தமிழ்ப் பாடலாக மொழிப்பெயர்த்தார் சுவாமிகள்.

"கண்களெத்தனை கரோடியெத்தனை கரிப்புலி
தொலிகளெத்தனை
திங்களின் கலை விடங்கள் சீறும் அரவங்களெத்தனை
செறிந்தெழும்
கங்கை நீயுமிதுபோல் கணக்கிலை நின் நீரில்
மூழ்குவோரொவ்வொன்றையும்
சங்கரித்து உயரும் ஆங்கு சம்புவின்
சத்ருபராகி இது சத்தியமே".

என்பது அப்பாடல்.

தத்துவ ஞானத் துறவியும் இலக்கண மேதையும் ஆகிய சட்டம்பி சுவாமிகளிடம் நட்புக்கொண்டு அத்வைதம் கற்றார். தைக்காடு அய்யாவு என்பவரிடம் யோக வித்தைகள் பல பயின்று பின்னர், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவாழ்மலையில் சில நாட்கள் பச்சிலை மட்டுமே உண்டு தியான நிலையில் அமர்ந்தார். மருத்துவாழ் மலையில்நின்றும் தியான நிலையில் தென்னிந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டார். சுவாமிகளை மக்கள் குருவாக முதலில் ஏற்றுக்கொண்ட இடம் நாகர்கோவில். பின்னர் சுவாமிகளின் புகழ் கேரளம்-தமிழகம் மட்டுமல்ல, ஈழநாட்டிலும் பரவியது.

''மக்களுக்குத் தேவை அவர்கள் வழிபட ஒரு ஆலயம்'' என்பதை உணர்ந்த சுவாமிகள் சமுதாய எதிர்ப்புகளை மீறி அருவிப்புறத்தில் முதலாவதாக ஒரு சிவன்கோவிலை நிறுவினர். ஆலயப்பிரவேசனமற்றிருந்த மக்கள், வெள்ளம்போல் திரண்டு இறைவனைத் தரிசிப்ப தற்காக நாடெங்கும் ஆலயங்கள் எழுப்ப அடிகளாரோடு ஒத்துழைத்தனர். ஆரம்பத்தில் கோபத்தோடு அவற்றை எதிர்த்த உயர்சமுதாய மக்களும் நாளடைவில் எதிர்ப் பைக் கைவிட்டனர்.

இன்றும் சமுதாய உயர்வுக்காக அயராது உழைக் கின்ற ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகத்தைத் தமது சீடர்களாகிய டாக்டர் பல்பு, மகாகவி குமாரனுசான் முதலியோரின் துணையோடு தனது அயரா உழைப்பினுல் உருவாக்கினுர்.

1913-ம் ஆண்டு சுவாமிகள் ஆலுவாயில் ''அத் வைதாசிரமத்தை'' நிறுவினுர். இவ்வாசிரமத்தில் அனைத்து சமயக் குழந்தைகளுக்கும் இலவசமாகத் தங்கி கல்விகற்க வசதி செய்தார். இதனுல் கல்வியின் அவசியத் தை மக்களுக்கு உணர்த்தினுர்.

''சுவாமிகள்'' என மக்கள் துதித்த நிலையில் 1917-ம் ஆண்டு மீண்டும் தமிழகமெங்கும் பயணம் மேற்கொண்டார். மக்களின் வேண்டுகோளை மறுக்க இயலாத நிலையில் 1918-லும் 1923-லும் இலங்கை சென்று வந்தார்.

1924 மார்ச்சு 3, 4 நாட்களில் சர்வசமயக்கூட்டம் ஒன்றை நிகழ்த்தி ''ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்''

என்னும் கருத்தை மக்களிடையே உபதேசித்தார். எனவே மக்கள் அனைவரும் தமது சங்கத்தில் சேரலாம் என வேண்டுகோள் விடுத்தார்.

1928-ஆம் ஆண்டு கேரளத்தில் சிவகிரி என்னும் இடத்தைச் சமயமக்களின் தீர்த்தாடன நிலையமாக மாற்றினர்.

சமுதாயச் சீர்கேடுகளைத் தனது இளமைக்காலத்தே புரிந்து சமுதாயத்தொண்டிற்காக உறவுகளைத் துறந்து சமூகத்தில் புரட்சியை விளைத்த சுவாமிகள் 1928-ம் ஆண்டு செப்டம்பர் 28-ம் நாள் சமாதி எய்தினர்.

சமயப் புரட்சியோடு இலக்கியப் படைப்புகளையும் அவர் ஆக்கிய நிலையை மலையாளம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் அமைந்த அவரது படைப்புக்கள் தெளிவாக்குகின்றன. சுவாமிகளால் பாடப்பட்ட திருக்குறள் ஒழிவிலொடுக்கம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பும் மொழிவெறியற்ற அவரது மேதைத்தன்மையை நன்கு உறுதிப்படுத்துகின்றன.

''மதம் ஏதானாலும் மனிதன் நன்ருக வாழவேண்டும்'' என உரைத்த சுவாமிகளை ராமகிருஷ்ண பரமஹம்சராக மக்கள் கண்டு மகிழ்கின்றனர்.

அருமானூரில் கோவில்கொண்ட மதிசூடும் செம்மேனிக் கறைக்கண்டனாகிய முக்கட் பரசிவத்தைப் பக்தியோடு பாடியுள்ள நாராயணகுரு அடிகளாருக்குச் சிவ சமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரிடம் பேரீடுபாடு இருந்தது.

"சைவத்தின்மேல் சமயம் வேறிலை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்நான்
மறைவாய்
மைவைத்தசீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்தநால்வர் பொற்றுள்எம்
உயிர்த்துணையே"

என்று சைவ எல்லப்பநாவலர் பாடுவதிலிருந்து சைவ சமய குரவர்கள் நான்குபேரையும் 'நால்வர்' என வழங்கிவரும் மரபினை அறியலாம். சைவசமய குரவர்களாயும் பெருந்தமிழ்ப் புலவர்களாயும் வாழ்ந்த இப்பெருமக்களை "நால்வர் நாவலர்" (30) என்றும் "பெரியோர்" (28) என்றும் நன்கு மதிக்கின்றார் நாராயணகுரு அடிகளார். தமிழ்த் தேவாரங்களில் அடிகளாருக்கு இருந்த பயிற்சி பலவாறு புலனாகின்றது. தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பாடிய நால்வர்போல அடிகளாரும் அருமானூர், தில்லை ஆகிய தலங்களைக் குறிப்பிட்டுப் பாடுகிறார். பத்துப்பாடல்களைக்கொண்ட பதிகவமைப்பில் பாடிய நால்வர்போல அடிகளாரும் பதிகங்களால் இறைவனைப் பாடியுள்ளார். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகள் அருளிச் செயல்கள் 'தேவாரம்' எனப் பெயர் பெறுவதுபோன்று அடிகளார் பாடல்களும் தேவாரப்பாடல்கள் என வழங்கப்படுகின்றன. மாணிக்க வாசகர், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகியவற்றை அந்தாதித் தொடையில் அமைத்துப் பாடியதுபோல் இரண்டாம் மூன்றும் தேவாரப் பதிகங்களை அடிகளாரும் அந்தாதித்தொடையில் பாடியுள்ளார். யாப்பு நிலையில் முதற்பதிகம் அறுசீர் ஆசிரிய விருத்தமாகவும் இரண்டாம் பதிகம் கலிவிருத்தமாகவும் மூன்றும் நான்காம் ஐந்தாம் பதிகங்கள் கலித்துறைகளாகவும் அமைந்துள்ளன.

நால்வர் பாடல்களிலுள்ள சொற்ரெடர்களை அப்படியே தன் பாடல்களில் தக்க இடங்களில் அமைத்துப் பொன்னேபோற் போற்றுகின்ருர் அடிகளார் (4, 14, 24, 27, 28, 29). அடிகளாரின் சில பாடல்கள் (14, 30), மாணிக்கவாசகரின் திருவாசக (215, 18) அமைப்பை அடியொற்றியுள்ளன. சிவபிரானின் அட்டமூர்த்தம் பற்றித் திருவாசகம் பாடியது (317) போலவே அடிகளாரும் பாடுகிருர் (11). சிவபிரான் விடமுண்டது (23) யமனை உதைத்தது (16) முப்புரம் எரித்தது (27) அரியும் அயனும் அடிமுடிதேட நின்றது (6, 20) ஆகிய புராண வரலாறுகள் நால்வர் பாடல்களிற் போலவே அடிகளார் பாடலிலும் அமைந்துகிடக்கின்றன; இவையனைத்தும் ஒப்புமைப்பகுதிகளில் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன.

அடிகளாரின் முதல் மூன்று பதிகங்களும் விளிகள் விரவப்பெற்று முறையிடும் பாங்கில் தோத்திர வடிவாய் இலங்குகின்றன. இறுதியிலுள்ள நான்காம் ஐந்தாம் பதிகங்கள், தத்துவச்செறிவு மேலோங்கிச் சாத்திர வடிவாய்த் திகழ்கின்றன. சுருங்கச் சொல்லின் இவ்வைந்து பதிகங்களும் அடிகளாரின் பக்திநெறியையும் தத்துவ அறிவையும் புலப்படுத்துகின்றன.

இத்தமிழ்ப்பாக்களை மூலபாடத்தோடு ஒப்பிட்டும், அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களைத் தந்தும் உதவிய செல்வி காஞ்சன, எம். ஏ.,

தேவார திருவாசகங்கள் தாயுமானவர் பாடல்கள் முதலிய நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகளைத் திரட்டு

வதில் பேருதவிசெய்த டாக்டர் சி. சத்தியமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.,

சொல்லகராதியை ஒப்புநோக்கி உதவிய திருமதி எஸ். ஆர். கிருஷ்ணம்பாள்,

இத்தேவாரப்பாடல்களுக்குத் தான் மலையாளத்தில் வெளியிட்ட குறிப்புரையைத் தந்து உதவிய டாக்டர் டி. பாஸ்கரன், எம். ஏ., பிஎச். டி.,

இந்நூலை நன்முறையில் அச்சிட்டு உதவிய கேரளப் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகத்தார்,

ஆகியோரின் உதவி இல்லையேல் இந்நூல் வெளிவந்திருக்க முடியாது; இவ் அன்பர்களுக்கெல்லாம் என் நன்றி உரித்தாகுக.

மா. இளையபெருமாள்,

அருட்பெருந்திரு நாராயணகுரு அடிகளாரின்

தேவாரப் பாடல்கள்

பதிகம் ஒன்று

1. ஞானோ தயமே! ஞாதுருவே!
நாமா தியிலா நற்கதியே!
யானோ நீயோ ஆதிபரம்?
யாதாய் விடுமோ! பேசாயே,
தேனார் தில்லைச் சீரடியார்
தேடும் நாடாம் அருமானூர்க்
கோனே! மானேர் விழிபாகம்
கொண்டாய்! நயினார் நாயகமே! 1

2. ஆள்வாய், நீயென் ஆவியொடூஉ
ஆக்கை பொருள்; மும் மலமுதிரும்
தேள்வாய் இடையில் திரியாமல்
தேவே! காவாய், பெரியோவே!
நாள்பா டந்தம் நருநரென
ஞெருக்கின் றதுபார், அருமானூர்
நாள்வாழ் நின்தாள் தாராயோ
நாதா! நயினார் நாயகமே! 2

3. உருவாய் அருவாய் அருவுருவாய்
ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய்த்
தெருளாய் அருளாய் தேர்உருளின்
திடமாய் நடுமாத் திரைவடிவாய்
இருளாய் வெளியாய் இகபரமாய்
இன்றாய் அன்றாய் அருமானார்
மருவாய் வருவாய் எனையாள்வாய்
நாதா ! நயினார் நாயகமே ! 3

4. வானாய் மலையாய் வாடிஇனும்
வானாள் வீணாய் அழியுமு னென்
ஊனாய் உயிராய் உடையோனாய்
ஒன்றாய் மூன்றாய் வாராயோ
கானாய் அனலாய்க் கனைகடலாய்க்
காராய் வெளியாய் அருமானார்த்
தானாய் நிற்கும் தற்பரம்உன்
தாள்தா, நயினார் நாயகமே ! 4

5. பூவாய் மணமாய்ப் புணரசமாய்ப்
பொடியாய் முடியாய் நெடியோனாய்த்
தீவாய் உருவாய்த் திரிசியமாய்த்
தேனார் அமுதாய்த் திகழ்கின்றாய்
நீவா காவாய் எனையாள்வாய்
நித்தாய்ச் சித்தாய் அருமானார்த்
தேவா ! மூவா முதற்கோனே !
தேனே ! நயினார் நாயகமே ! 5

6. அரியும் விதியும் தேடிஇனும்
அறியா எரியாய் அருவுருவாய்

மரியா மறிமான் இடவடிவாய்
மடியா தேஇனி வா! காவாய்
பிரியா தேயென்னை ஆள்வாய்தேப்
பிரியப் பெரியோர் அருமானூர்ப்
புரிவாணருளீ டும்கோவே!
பூவே! நயினார் நாயகமே! 6

7. அன்றே இன்றே யமதூதர்க்(கு)
அன்றே, நின்னருள் தாராயோ
குன்றே! குடையே! கோதனமே!
கோவே! காவாய் குலதேவே!
அன்றே, இன்றே ஆரடியேன்
நாயேன், நீயே அருமானூர்
நின்றாய் நின்னருள் தாராயோ!
நேயா! நயினார் நாயகமே! 7

8. நின்தார் அடிசேர் அடியார்தம்
நின்றன் இயலா நீக்கிநிதம்
சந்தா னமதாய் நின்றாளும்
சந்தா பமிலா நன்மயமே!
வன்தா பம்இலா தென்முன், நீ
வந்தாள் வாயே! அருமானூர்
நந்தாய் நின்தாள் தாராயோ!
நாதா, நயினார் நாயகமே! 8

9. பொன்னே! மணியே! மரகதமே!
பூவே! மதுவே! பூம்பொடியே!
மன்னே! மயிலே! குயிலே! வன்
மலையே! சிலையே! மாநிலமே!

என்னே, எனையாள்வாய் நீயே
எளியேன் நாயேன் அருமானார்த்
தன்னந்தனியே நின்றாய்நின்
தாள்தா, நயினார் நாயகமே! 9

10. கல்லோ மரமோ காரயமோ
கடினம் நம்நெஞ் சறியேன்யான்
அல்லோ பகலோ உன்னடிவிட்(டு)
அல்லோ கலமாய் நின்றடியேன்
சொல்லா வல்லா சுருதிமுடிச்
சொல்லா னல்லாய் அருமானார்
நல்லார் மணிமாதவ! காவாய்
நாதா! நயினார் நாயகமே. 10

பதிகம் இரண்டு

11. ஓம்ஆதியில் நிற்கும்பொருள் நீதான் உலகெங்கும்
தாமாகி வளர்ந்தோங்கிய சாமானிய தேவே! வி
யோமானல பூநீரொலி யோடாவி விளக்கோ(டு)
டாமாதனு வாராயி நமக்காய மிதாமே. 1

12. ஆமோதமு மாமிந்த மகாமந்திர மிதொன்றும்
நாமாது நமக்கீன்ற ருளாயோ நமையாளும்
கோமான ருளும்கொண்ட குழாம்கூவி
யணைந்தால்
ஆமோதமு மாமிந்த மகாமந்திர மிதெல்லாம். 2

13. எல்லாஉயி ரும்நின்னுரு(அ) எ(வ)ல்லா
உடலும்நீ
எல்லாஉல கும்நின்களி அல்லா தவையில்லை
பொல்லாதன வெல்லாம்பொடி செய்தாண்
டருள் பூவிற்
பல்லாருயி ராளும்பர தேவே! சுர கோவே! 3

14. கோவேறுபி ரானே! குறியற் றோங்கி விளங்கும்
மூவேழுல கும்மோங்து மெழும்மோன விளக்கே!
பூவேறு பிரானும்நெடு மாலும்பொடி காணு(து)
ஆவே சர்கள் ஆறுருரு பாரோ ரறிவாரோ! 4

15. வாரோ! வரையோ! வாரிதியோ! வானவர்
சேரும்
தாரோ! தரையோ! தண்மலரோ! தற்பரனே! நீ
யாரோ? நீரறியேனடி நாயேன் அருள்வாயே
நீராறணி வோனே! நிதம் ஆள்வாய் நிம்மலனே! 5

16. நிமல நித்தியனே! நிர்பயனே! நிர்குணனே!
அவமேபுவி நாயேனழி யாதேநிதம் ஆள்வாய்
நமனைக்கழ லால்காய்ந்த நடேசா! நமை நீயே
புவிமீதருள் வாரம்புரி வாயே பெருமானே! 6

17. மானே! மதிசூடும் மறையோனே! சடையாடி
வானோர்கள் வணங்கும் வடிவே! வந்தருள்
வாயே
தேனே! தெளி வே! தீஞ்சுவை யே! திவ்விய
ரசம்தந்
தோனே! துணை யேதொன்மறை
ஓராறுணர்வோனே! 7

18. உணர்வார் அறிவாரோ அறிவாரெங் குமிலங்கும்
உணர்வே! பொற்குவையே! போதவரம்
பின்றியபூவே!
புனலே! புத்தமுதே! வித்தகமே! வந்தருள்நீ
அனலே! வெளியே! மாருதமே! மானிலமேவா. 8

19 வாவா சடையிற்கங்கை வளர்க்கும் மணியே!
என்
பாவாய் மதியே! பங்கயமே! பன்மறையிரும்
தேவாதிகள் போற்றும் தெளிவே! திண் கடல்
சேரும்
நாவாய்எனையாள்வாய் நதிசூடி நரகாரே! 9

20. காரேறு கயற்கண்ணியர் வீசும் வலையிற்பட்
டாராரழி யாதோர் அவமே! நீ யறியாயோ
ஏரேறு பிரானும்நெடு மாலும்பொடி காணு
சாராமுத மொன்றீந்தரு ளாயோபெரு மானே! 10

பதிகம் மூன்று

21. எங்கும்நிறைந் தெதிரற்(று) இமையாதவர்
இன்புறச் சிற்சுடரே!
பொங்கும்பவக் கடலிற் படியாத படிக்குன்
னருள்புரிவாய்
திங்கள்திரு முடியில்திகழும் திவ்விய தேசோம
யானந்தமே!
தங்கக்கொடி யே! நமைத் தடுத்தாட்
கொள்வாய்நீ கருணாநிதியே! 1

22. தீயே! திரு நீறணியும் திருமேனியிற் றிங்க
ளொளிமிளிரும்
நீயேநிரை யக்கடலில் கனிமஞ்சனம் செய்யா
தருள்புரிவாய்
காயும்புனலும் கனியும்கனல் வாதெய்வத்தை
நினைத்தருந் திக்கண்ணீர்
பாயும்படி படியில்பர மானந்தம் செய்யும்
பரஞ்சுடரே! 2

23. சுடரே! சுடர் விட்டொளிரும் சுரர்சூழ்ந்
திருக்கும்சுர விசுடர்சூழ்க்
கடலே! மதி கங்கையர வங்கள்தங் கும்கவரி
விரிசடையாய்!
விடமுண்ட முதம்கனியும் மிடர்கண் டிலனுயின்
அவனிமிசைக்
குடிகொண்ட திறல்என்கொல்? கொன்றல
ரணிந்துகூ வும்குயிலே! 3

24. குயில்வாணி குரும்பைமுலை உமைகூடி
நின்றுடும் கருமணியே!
மயில்வாக னன்வந்தரு ளும்மணிமந்
திரம்கோள்மயிர் மேனியனே!
கயற்கண்ணியர் கண்கள்மூன்றும் கதிர்திங்க
ளுமங்கியும் அங்கொளிரும்
புயங்கம்புன லும்சடையும் புலைநாயினேற்கு
அம்புவியிற் புலனே. 4

25. புலனீற்றுப் பொறிகளற்றுப் பரிபூ ரணபோதம்
புகன்றபுத்தேள்
உலகற்றுஉட லோடுயிருள் ளமுடங்
குமிடங்கொடு ரும்பொழிந்த

நிலைபெற்று நிரஞ்சன மாகிநிரு பாதிகைநித்
திரைக்கடலே!
அலைபொங்கி யடங்கி மடங்கிஅலங் கோலமாகா
தருள்புரிவாய். 5

26. வாயிற் குடமென வரம்பிலேவக் கடலில்வழித்
தங்குமிங்கும்
நாயிக ளேதினும்நட் டம்திரியா தனுக்கிரகம்
நல்கிடுவாய்
பாயும்மிரு கமும்பரசு ம்படர்பொங் கரவின்பட
மும்சடையில்
சாயும்சிறு பிறையும்சர ணங்களும் சர்வம்
சரண்புரிவாம். 6

27. புரிவாயிற் புதைந்துமுன் னம்பொன்மலை
யைச்சிலையாய்க் குனித்துப்பூட்டி
புரமூன்றும் எரித்தபிரான், உம்பர்தம்பிரான்,
எம்பெரு மான்பொதுவாய்ப்
புரியும்நட னபுவியில் புலைநாயி னேன்அம்புதி
யிற்றிரைபோல்
திரியும் சகன்மாயை சிக்கித்திரிந் தியந்தோ!
செம் மேனியனே! 7

28. செம்மேனிச் சிவபெருமான் சிரமாலை
யணிந்துசெங் கோல்செலுத்திச்
செம்மாந்திரம் வேரறுப்போன் திருமந்திர
செம்மை செருக்கறுப்போன்
பெம்மான்பிணக் காடனென்றும் பெரும்பித்த
னென்றும்பெரி யோர்பெயரிட்
டிம்மானிட வீட்டிலணங் குமுய்யும்வகை
எங்ஙனந் தோ? இயம்பாய். 8

29. இயம்பும்பத மும்பொருளும் இறையின்றி
யிருக்குமிந்த
வியப்பன்வெளி வானதெங்ஙன் விளையாத
விளையும் மதியென்கொலோ?
செயிக்கும்வழி எங்ஙனே? யெங் கள்செம்பொற்
சோதியே! யென் மயரறுக்கும்
தயைக்கென்னகை மாறுசெய்வேன் தயாவாரிதி
யே! தர மிற்றமியேன். 9

30. தமியேன்தவம் செய்தறியேன் சபாநாயகர்
சந்நிதிக் கேதினமும்
கவியேன்கழல் கண்டுகை கூப்பிக்கடைக்கண்
ணீர்வார்த்துக் கனிந்துமிலேன்
நவின்மாலை புனைந்துமிலேன் நால்வர்நா
வலர்சூழும் திருவடிக்கும்
புவிமீ தெனையே வகுத்தாய் புலைநாயேன்
பிழைப்பதெங் ஙன்? புகல்வாய். 10

பதிகம் நான்கு

31. தரிசனம் திருட்டித் திரிச்சியங் களற்றுத்
திகம்பரியாய்ப்
பரியடனம் செய்யும் பண்டித ருள்ளம்
பலிகொடுத்துத்
துரிசறச்சுட்டுத் தத்துவங் களற்றுத்
தனிமுதலாய்க்
கரிசனம் கண்ட கறைக்கன் டரென்குல
தெய்வதமே! 1

32. ஆதார சத்தின் பரிபூரணத் தில்அசல் பிரபஞ்சப்
பாதா ரகிதம் பவிக்குமப் பட்சம் பிடிவிடாதே
நாத பனரயி நடுநின்ற நாட்ட நழுவியாத்மா
போதங் கெடுத்துப் புனருத்திதி விட்ட
தென்தெய்வமே! 2

33. வானற்று மண்ணெருப் பருப்பற்று வனந்திசி
குற்றமற்று
கானற்றுக் காலசக்கிரப் பிரமமற்றுக்
கதிரொளிவாய்
ஞானக் கனல்கரி யற்று ஞாதிர்குரு மூலமற்று
மானங் களற்று மகாமௌன மென்கண்
மணித்தெய்வமே! 3

34. முப்பத்து முக்கோடி யற்று மும்மூர்த்திகள்
பேதமற்று
கர்பிதத் தொய்தப் பிரபஞ்சமாம் கானற்
கமலமற்று
முப்பொரு ளற்றுமுப் பாழற்று முத்திகள்
மூன்றுமற்று
முற்படும் முக்கட் குருமணிக் கோவென்
குலதெய்வமே! 4

35. வாக்கு மனமற்று வான்சுட ராய்வடி
வொன்றுமற்று
நோக்கு மிடங்கள் நெருங்கி நோக்குகொள்
அதிசயமாய்
ஆக்குமத் திற்கும் அதிசூக் குமமாய்ச்
சுயஞ்சோதியாய்க்
காக்குமென் காருண்ய சாலி நமக்குக்
குலதெய்வமே! 5

36. விர்த்தியில் தோன்றி விரிகின்ற விசுவப்
பிரமமனைத்தும்
விர்த்தியி னுள்ளே லயிப்பித்து விர்த்தி
சத்திகலந்தது
விர்த்தி அவிர்த்தி களற்று விறகற் றெரி
சுடர்போல்
சத்துசித் தானந்த பூரண செல்வஞ்
செயநமக்கே. 6

37. பிர்ம்ம சொரூபம் பிரமங் கொண்டு
பேதப்படுத்தினுல்
கர்மடர் பிராரப்த கர்மத்தி னுல்கரி
கண்டதுபோல்
கர்மகுருடர் கரங்கொண்டு கட்டிப்
பிடிப்பதினே
கர்மிச் சிடுன்னு கருணு கர! கதி எந்தவர்க்கே. 7

38. எல்லா மவன்செய லென்றெமக் குள்ளோர்
எளிதருளால்
சொல்லாமற் சொல்லிய சூக்கும சுகப்பொருள்
தூவெளியில்
பல்லா யிரங்கோடி யண்டம் பலிகொடுத்
தப்புவியிற்
செல்லாது சென்ம நிவிர்த்தி வருமோ
சிவதெய்வமே! 8

39. எல்லாம் அகமக மென்றே கபோதம்
வருத்தியதும்
நில்லாது நின்னில் கலர்த்தி நீயும்நானு
மற்றிடத்துத்

தொல்லை யறும்என்று தொந்தத் தினிற்கிடந்
தெப்பொழுதும்
சொல்லித் தொழும்என் துயர மொழிக்க
சுகக்கடலே! 9

40. பூரண சத்திலசற் பாத மற்றுப் புராதனமாம்
காரண மற்றுக் கருவற்றுக் காரியசங் கற்பமற்று
தாரணையும் விட்டு தத்துவம் பதத்து
விதப்பொருளாம்
மாரணங் கொட்டி அடியற்ற ரூபமென்
தெய்வதமே! 10

பதிகம் ஐந்து

41. சித்தென் றுரைக்கிற் சடபா தகம்உண்
டதைப்பிரித்து
சத்தென்று சொல்லில் அசத்துமங் கேவந்து
சார்ந்திடுமால்
சுத்தம் குளிர்த்த சுகமெனில் துக்கமனைத்
துமற்றோர்
இத்தன் மையுள்ளொரு தெய்வத மென்றும்
நமக்குள்ளதே. 1

42. சிற்சட மற்றுச் செறுந்திலங் கிச்சத சத்துமற்று
பற்பல காட்சித் துகளற்றுப் பந்தநிர்
மோட்சமற்று
கற்கண் டின்சுவை போல்அன் பருள்ளங்
கவர்ந்து நிற்கும்
இத்தன் மையுள்ளொரு தெய்வத மென்றும்
நமக்குள்ளதே. 2

43\. ஒன்றன் றூண்டெனும் குற்றம் பவிக்கு
மதன்றிவெறும்
குன்றெனிற் பள்ளமும் நேரே விருத்தங்
குறித்திடிலோ
குன்றிடுங் குற்றம் கடிந்தன்ப ருள்ளம்
கவர்ந்தபிஞ்சு
கன்றன் திருவிளை யாடல்இக் கண்டது
உலகமெல்லாம். 3

44\. ஈலுங் கணத்தி லிருக்குகை குற்றம்
எதிர்கணத்தின்
மூலப் பொருளல்லை மூன்ருவதில்பின்
முடிவுமெங்கே?
காலத்தி லொன்றி விருப்புள்ள தொன்றிற்
கடும்பகையாம்
மாலு மயனும் அதிற் பட்டு ருத்திரனும்
மாய்ந்திடுமே. 4

45\. மாலு மயனும் மகேசுவரன் ருத்திரன்
சதாசிவனும்
காலச் சக்கரப் பிரமத்தைக் கண்டுகைகுவித்
தெவ்வுலகும்
லீலையில்வைத்து லயிப்பித்து லிங்கப் பிரதிட்
டைசெய்து
மேலிள காதே மெழுகிட்டு உறைப்பித்ததென்
தெய்வதமே. 5

46\. வேறுவேரும் விடயங்கள் வெறுஞ்சட
மேபொறியிற்
சேருமப் போது செகம்பர மெங்கும்
செறிந்திலங்கும்

சீரருள் சோதி சிவசிற் பரபானு எழுந்தருளிக்
கூடிருள் கோரிக் குடித்து வெளியிற் குலாவுமதே. 6

47. பாரைம் புலங்கள் பொறிவாய் மடிந்து பகர்வரிய
காரண காரிய மற்றுக் கரணக் கவர்கடிந்து
பூரண சோதியிற் புத்த புருடப் புரைகடீர்ந்து
சீரணர் செகச் சோதியிற் சிந்தை
திறைகொடுப்பேன். 7

48. தேகமிது திட்டமல்ல திவ்வி யானந்தத்
தெள்ளமுதில்
தாகமற மூழ்கிச் சாதனச் சாத்தியச்
சார்வொழிந்து
போகும் படிக்கு புவனேக நாதன் கருணைபூத்த
பாகம் பகர்ந்த பசுங்கொடி யோடிங்
கணைவதென்றோ? 8

49. பஞ்சப் படும்பற வைக்கோ பரம்பியிப்
பாழ்மனமாம்
புஞ்சக் களைக்கொய் துபுலங்குடிப் பொக்கிழமாம்
கஞ்சிக் குடிக்கோ குடியேற்றி நீ கருணாகரனே!
தஞ்சம் திருவடி யென்று தமியேன்
தளருகின்றேன். 9

50. எந்தக் கணத்தி லெதிரற் றெமன்வலை
யில்பிணிப்பற்று
அந்தக் கணம்அகங் காரமிஞ் ஞானப்பிர
காசமுண்டாய்
எந்தக் கணங்களும் எட்டா திணையில்
பரசிவத்தின்
கந்தக் கமல மலர்ப்பதம் இரண்டும்
கதிநமக்கே. 10

குறிப்புரை

பதிகம் ஒன்று

அருமானூர்ப்* பதிகம்

1. ஞானத்தின் தோற்றமே! எல்லாம் அறிபவனே! நாமம் உருவம் முதலியன இல்லா நற்கதியே! ஆதி பரம் பொருள் யானோ நீயோ? முத்திக்கு முயலும் என் நிலை எவ்வாறு போய்முடியுமோ? சொல்லாய்! தேன் துளிக்கும் தில்லையில் வாழும் சிறப்புமிக்க மெய்யடியார்கள் தேடி வருகின்ற பெருமைமிக்க நாடாகிய அருமானூரில் வீற்றிருக்கும் இறைவனாகிய சிவபிரானே! மானை ஒத்த விழியாளாகிய உமையம்மையை இடப்பாகத்தில் வைத்தாய்! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

நாமாதி இலா நற்கதியே!: "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லான்" என்பது திருவாசகம் (235).

யானோ நீயோ ஆதிபரம்?: சைவ சித்தாந்தத் தத்துவத்தின்படி இறைவனும் உயிர்களும் என்றும் உள்ளவை; படைக்கப்படாதவை; "என்று நீ அன்று நான் உன் அடிமையல்லவோ" (சுகவாரி: 7) என்று அருளினர் தாயுமானவ அடிகளும்.

தில்லைச் சீரடியார் தேடும் நாடாம் அருமானூர்: சைவ சமய மரபில் வறிதே "கோவில்" என்று மட்டும் கூறினால், அது தில்லைநகரிலுள்ள சிற்றம்பலம் (தற்காலத்தில் சிதம்பரம் எனப் பெயர்பெறும் சிவதலம்) என்ற தலத்தையே

---

* இவ்வூர் கேரளத்தின் தென்பகுதியில் நெய்யாற்றின்கரையிலிருந்து விழிஞத்திற்குச் செல்லும் வழியிலுள்ளது.

குறிக்கும். கேரளத்தில் வாழ்ந்த சேரமான் பெருமாள், சிதம்பர நடராசரைப் பூசை செய்து, அப்பூசை முடிவில் திருச்சிலம்பொலி ஓசை கேட்கப் பெற்ருர் என்று பெரிய புராணம் கூறும் (கழறிற்றறிவார் 23, 24, 41). ஆனல் தில்லையிலுள்ள அடியார் அருமானூரைத் தேடிவந்து வணங்குவதாகச் சுவாமிகள் குறிக்கிருர்.

2. என் உயிரோடு இந்த உடம்பு செல்வம் எல்லாவற்றையும் நான் உனக்கு அர்ப்பணித்துவிட்டேன்; அவற்றை ஏற்று என்னை ஆண்டருள்புரிவாய்! மும்மலங்கள் முதிர்கின்ற தேள்வாயிடையில் திரியாமல் காப்பாயாக! தேவனே! யாரினும் பெரியோனே! நாட்களின் மிகுதி, இறுதியை ஞெருஞெரேரென நெருக்கின்றதனைப் பார்ப்பாயாக. அருமானூரிலே நாள்தோறும் வாழ்கின்ற நின் தாளை நான் வணங்கத் தாராயோ! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

ஆவியொடு ஈ ஆக்கை பொருள் :

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை
எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்டபோதே
கொண்டிலையோ"

என்பது திருவாசகம் (500).

மும்மலம் : ஆணவம், கன்மம், மாயை மூன்றும்.

"உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த–வள்ளல்..."

என்பது திருவாசகம் (627).

தாள் தாராயோ : "தளிர் பொற்பாதம் தாராயே" என்பது திருவாசகம் (490).

"தாளை நாளும் பரவத் தருவார்":
சேரமான் பெருமாள் நாயனர் புராணம் 115.

3. வடிவுள்ளதாகவும், வடிவற்றதாகவும், வடிவற்ற இயல்பும் வடிவுள்ள இயல்பும் ஒருங்குடையதாகவும், தனி

ஒன்ருகவும், தானே பலவாக விரிந்தும், உயிர்களுக்கு உள் நின்று இயக்கும் உயிராகவும், தெளிவாகவும், கருணையாக வும் தேர்ச்சக்கரம்போல் அனைத்தையும் தாங்கும் திண்மை யுடையதாய், நமசிவாய என்ற திருவைந்தெழுத்தில் நடுநிற் பதும் சிவபிரானைக் குறிப்பதும் ஆகிய 'சி' என்னும் எழுத்து ஒலியளவே வடிவாகவுடையதாய் இருட்டாய் வெட்டவெளி யாய் இம்மை மறுமையாய் இல்லையாய் அல்லையாய் அருமா னூரில் கமழும் நறுமணமாய் வந்து என்னை ஆண்டருள்புரி வாய்! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

—அருணகிரிநாதரின் கந்தரநுபூதி.

தேர் உருளின் திடமாய்:

"...வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலன் னோனே" —புறநானூறு 87:2-4.

"நாயோட்டு மந்திரம் நாதன் இருப்பிடம்"

—திருமந்திரம் 2672.

மருவாய் மலராய்:

"உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்..."

என்பது திருவாசகம் (434).

4. பூதங்கள் தோன்றவும் ஒடுங்கவும் இடமாக நிற்கும் ஆகாயமாகவும் தெளிவாகத் தெரியும் வெள்ளிடைமலையாக வும், மேலும் வருந்தி உள்ள வாழ்நாட்கள் பாழாகி அழியும் முன்னரே என் உடலாய், ஆவியாய், தன்னுடைமையாகிய என்னை உடையவனுய் நிர்க்குணப்பிரம்ம நிலையில் கடவுள் எனத் தான் ஒன்ருய் சகுணப்பிரம்ம நிலையில் பிரமா,

விட்ணு, உருத்திரன் என வடிவு மூன்ருய் வந்து அருள் புரியாயோ! காடாகவும், தீயாகவும், ஆரவாரிக்கும் கடலாகவும் முகிலாய் முகில் இயங்கு வான்வெளியாய் இவ்வாறு அனைத்துமாய்க் கலந்த நிலையிலும், அனைத்தையும் கடந்த நிலையில் தான் ஒருவனுமாய்! அருமானூரில் நிலைத்துநிற்கும் பரம்பொருளே! உன் திருவடியிணைகளைத் தந்தருள்வாய்! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

"வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்"
என்பது திருவாசகம் (229).

"கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற பெரியானை"
என்பது அப்பரடிகள் தேவாரப்பகுதி (6:1:1).

ஒன்ருய் மூன்ருய்:

"படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை"
என்பார் திருஞானசம்பந்தர் (1:128)

5. மலராய் வாசமாய் சேரும் பிறப்பிலியாய், பொடியாய்ப்போய் முடியாமல் அழிவின்றி நிற்பாய், நெடியவனுய், தீவாயுருவாய் காட்சிப்பொருளாய் தேனூர் அமுதாய் இலங்குகின்ருய்! நீ வந்து என்னைக் காப்பாயாக! நித்தியமாய்ச் சித்தாய்த் திகழும் அருமானூர்த் தேவனே! என்றும் மூப்பின்றி அழிவின்றி நிற்கும் முதற்கடவுளே! தித்திக்கும் தேனே! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

தேனூர் அமுதாய்:

"தேசனே தேனூரமுதே சிவபுரனே!"
என்பது திருவாசகம் (1:63)

சித்தாய்: "சித்தாய வேடத்தாய்" என்பார் அப்பரடிகள் (6:62:1).

6. விட்டுணுவும் பிரமனும் முறையே அடியையும் முடியையும் தேடி இன்னும் அவர்கள் இருவராலும் அறியமுடியாத் தீப்பிழம்பாய் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்க வடிவாய்த் தோன்றியவனே! உன்னைச் சேர்ந்தமையால் இறப்பின்றி இருக்கும் மானை இடக்கையில் ஏந்தியவனே! நானும், மான்போல மரியாமல், மடிந்துபோகாமல் இனி வந்து என்னைக் காப்பாற்று! பிரிவின்றி நின்று என்னை ஆண்டருள்புரி! தேவப் பிரியனே! பெரியோர் உறையும் அருமானூர்ப்புரியில் வாழ்ந்தருளும் அரசே! சுகந்தமலரே! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

விதி : பிரமன்–பரிபாடல் 3:6.

மான் இடன் : திருவாசகம் (150).

மடியாதே இனி வா : சோம்பற்படாமல் இனியாவது வா என்றுமாம்.

"பவனெனும் நாமம்பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழியான் என்றெதிர்ப்படுமே"

என்பார் அப்பரடிகள் (4:112:9).

7. எதிர்வருநாள் அன்றுதானோ இன்றுதானோ யமதூதர் கையில் நான் பிடிபடுவது என்று? என்று எனக்குத் தெரியாது. ஏதோ ஒரு நாளன்று யமதூதர் வரும்போது அவர் வரும் அன்று அவரை என்பால் அணுகவிடாமற் செய்து உன் தாளிணைகளை எனக்குத் தந்து தடுத்தாட் கொள்ளல் வேண்டும். திண்மைக்கு மலையே! மழைக்குக் குடைபோல் என்னைக் காத்தாள்பவனே! பசுச்செல்வம் போன்றிருக்கும் அடியார் செல்வமே! அன்றும் இன்றும் உன் அருமையடியானாக நாய்போன்ற நான் இருக்கின்றேன். நீயோ அருமானூரில் நிற்கின்றாய்! உன் தாளிணைகளைத் தந்தருள்வாய்! அடியார்பால் நேயமுள்ள தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

"கோவாய் முடுகியடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவடென்மேற் பொறித்துவை"

என்பது அப்பரடிகள் தேவாரம் (4:96:1).

குன்றே! குடையே! கோதனமே!: கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்துப் பசுச்செல்வத்தை, இந்திரன் பெய்வித்த பெருமழையினின்றும் கண்ணன் காத்த வரலாற்றைச் சிவபிரான்மேல் ஏற்றிச் சொன்னார் எனலுமாம்.

8. உன் மலரடி சேரும் அடியார்தம் நிந்தை முதலியனவெல்லாம் நீக்கி என்றும் பாரம்பரியமாய் அவர்களைக் காத்தருளும் துன்பக்கலப்பில்லாத நன்மைவடிவே! கொடிய பிரிவுத் துன்பம் போகும்படி என்முன் எழுந்தருளி வந்து என்னை ஆண்டருள்புரி! அருமானூரிலுள்ள நம் தாய் போன்றவனே! உன் தாளிணைகளைத் தரமாட்டாயா! என் தலைவா! தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

"பிரிவிலா அடியார்க்கென்றும் வாராத செல்வம்
வருவிப்பானை"

என்பது அப்பரடிகள் தேவாரம் (6:54:8).

சந்தானமதாய் நின்றருளும்:

"மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி"

என்பது திருவாசகம் (4:118-119).

9. தங்கமே! மாணிக்கமே! பச்சைமணியே! மலரே! தேனே! மகரந்தமே! நிலைத்தவனே! மயிலே! குயிலே! திண்மையில் மலையே! கல்லே! நிலமே! என்னை இனி ஆள்வாய் நீயே. அடியேன் எளியவன்; நாய்போன்ற கீடையவன். அருமானூரில் தனித்தநிலையில் ஈடிணை எதுவுமின்றி நின்றாய்! உன் தாளிணைகளைத் தந்தருள்வாய். தெய்வங்கள் தலைவனே!

ஒப்புமைப்பகுதி

மலையே: "குன்றே அனையாய்" —திருவாசகம் (500)

தன்னந்தனியே நின்றாய்: "தான் தனியன்"

திருவாசகம் (257)

10. நம் நெஞ்சம் கல்லோ மரமோ கரிய இரும்போ. நெஞ்சத்தின் இக்கடினத்தன்மையை நான் அறியமாட்டாதவனாய் இருக்கிறேன். இரவும் பகலும் உன் திருவடிகளைப் பேணி வழிபடாமல் கைவிட்டதால் அல்லோலகல்லோலமாய் அடியேன் தலைதடுமாறி நின்று வருந்தினேன். சொல்லொணாத மறைமுடிவாய் வேதத்தின் அந்தப் பொருளாக இருக்கும், அருமானூரில் வாழும் மெய்யடியார்களுக்குச் சூளாமணியாயிருக்கும் பெருந்தேவனே! தலைவனே என்னைக் காப்பாய்! தெய்வங்கள் தலைவனே.

ஒப்புமைப்பகுதி

"நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாம்

தீவினையினேற்கே"

என்பது திருவாசகம் (25).

சுருதிமுடிச்சொல்லா நல்லாய்:

"மறையில் ஈறும் முன் தொடரொணாத நீ"

—திருவாசகம் (99).

பதிகம் இரண்டு

11. உலகத் தோற்றத் தொடக்கத்திற்குக் காரணமான ஓங்காரமாகி ஆதியிலிருந்து என்றும் உள்ள பொருள் நீதான். உன் விருப்பப்படி உலகெலாம் நீயாக வளர்ந்தோங்கி எல்லோர்க்கும் பொதுநின்ற தெய்வமே! நிலம், நீர், தீ, காற்று, வானோடு உலகுக்கு அமைந்து பெரு விளக்குகளாகிய ஞாயிறு திங்களும் அந்த உயிருமாய் அட்டமூர்த்தியாய் நீ வாராய்! வரின் இவ்வுலகப் பொருள்களுடன் வாழும் நமக்கு இது இலாபமாகும்.

ஒப்புமைப்பகுதி

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து
நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"
—திருவாசகம் 317.

ஓம் : பிரணவ மந்திரம்.

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா"

என்பது திருவாசகம் (1:33-34).

ஆதன் : ஆன்மா.

12. மகிழ்ச்சியும் ஆகும் இந்த மகாமந்திரம் இது ஒன்றும், கலைமகளே நமக்கு இன்று அருளத்தாராயோ! நம்மை ஆளும் கோமான் அருள்கொண்ட குழாம் அழைத்து அணைந்தால், மகிழ்ச்சியும் ஆகும். இந்த மகாமந்திரமே எல்லாம்.

ஒப்புமைப்பகுதி

கோமான் அருளும் கொண்ட குழாம் :

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்" என்பது திருவாசகம் (376).

"உன் அடியவர் தொகை நடுவே
ஓருருவாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண்டருளே"
—திருவாசகம் (597).

13. எல்லா உயிர்களும் உன் உருவம்! எல்லா உடல்களும் நீயே! எல்லா உலகங்களும் உன் திருவிளையாடல்கள் அல்லாமல் வேறில்லை. தீமைகளை எல்லாம் ஒழித்து என்னை ஆண்டருள் புரிவாய்! நிலவுலகில் பலவகை உயிர்களையும் காத்தாள்கின்ற பெருந்தேவனே! தேவர்கள் வேந்தனே!

ஒப்புமைப்பகுதி

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

—திருமூலர்.

"கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி"

—திருவாசகம் (166).

14. காளையை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானே! குறிகள் அற்று ஓங்கிவிளங்கும் மூவேழு உலகங்களையும் விழுங்கிப் பின்னர் உமிழ்ந்ததோடு மௌனம்மூலம், உன்னை நாடிவந்த ஞானிகளுக்கு எழுந்த ஐயங்களைத் தெளிவாக விளக்கிய தீபமே! செந்தாமரையில் வீற்றிருக்கும நான்முகனும் நீண்டுவளர்ந்த திருமாலும் தேடியும் தீப்பிழம்பாய் நின்ற உன் உருவத்தின் ஒரு சிறு பகுதியைக்கூடக் காண முடியாமல் அஞ்சி வெறிகொண்டவராயினர். உன் அரிய உருவத்தை யார்தான் அறிவார்; வானோர் அறியா உன் உருவத்தைப் பாரோர் அறிவாரோ.

ஒப்புமைப்பகுதி

விழுங்கி உமிழ்தல்: ஒடுக்கிப் பின்னர் படைத்தலை உணர்த்தும்

பூவேறுகோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

—திருவாசகம் (215)

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

—திருவாசகம் (324)

பொடி : அடிப்பொடியுமாம்.

15. நீ மேகமோ, மலையோ, கடலோ, வானவர் சேரும் சுவர்க்கமோ, இப்பூமியோ, குளிர்மையுடைய மலரோ! பரம்பொருளே நீவிர் யாரோ? அடிநாயேனுகிய நான் உன்னை அறியமாட்டாதவனுய் இருக்கிறேன். பேராற்றலுள்ள நீதான், எனக்கு உன்னை அறிவித்தருளவேண்டும். திருநீறும் கங்கையாறும் அணிந்தவனே! மும்மல அழுக்கில்லா முழுப்பொருளே! என்றும் என்னை ஆண்டருள்புரிவாயாக!

ஒப்புமைப்பகுதி

விரிகதிர்ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர்
விண்ணும்நிலனும்
திரிதருவாயுவல்லர் செறுதீயுமல்லர் தெளிநீருமல்லர்
தெரியில்
அரிதருகண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில்
வருவார்
எரியரவாரமார்பர் இமையாரும் அல்லர் இமைப்பாரும்
அல்லர் இவரே.

—திருநாவுக்கரசர் தேவாரம் (4:8:2)

16. மும்மலம் அற்றவனே! நிலைத்து என்றும் நிற்பவனே! வேண்டுதல் வேண்டாமையாகிய பயன்களைக் கடந்தவனே! குணங்களுக்கு அப்பாற்பட்டவனே! பூமியில் நாய் போன்ற நான் வீணுகப் பிறந்து இறந்து போகாமல் நாள்தோறும் ஆண்டருள்புரி! யமனை உன் தூக்கிய திருவடியால் உதைத்து மார்க்கண்டேயரைக் காத்தருள்புரிந்தாய்! அன்பும் அருளும் புரிந்து இப்புவிமீது நம்மையும் நீதான் காத்தருள்புரியவேண்டும் பெருமானே!

ஒப்புமைப்பகுதி

நிர்பயனே!: யாருக்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லாதவனே எனலுமாம்.

"கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து
நட்டம்"

—திருநாவுக்கரசர் தேவாரம் (4:81:2)

17. மானை ஏந்திப் பிறையைச் சூடும் மறையோனே! சடையோடு ஆடுபவனே! தேவர்கள் வணங்கும் திருமேனி யுடையவனே! காட்சி நல்கித் திருவருள்புரிவாய்! தித்திக் கும் தேனே! தேறலின் தெளிவே! இன்சுவையே! புனித அமுதைத் தந்தவனே! தோன்றுத் துணையே! பழைய நால் வேதத்தின் ஆறங்கத்தையும் ஓதாது உணர்ந்தவனே!

ஒப்புமைப்பகுதி

தொன்மறை ஓரா றுணர்வோனே:

"ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி"

—திருநாவுக்கரசர் தேவாரம் (6:55:11)

"தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! தித்திக்கு
மானே! அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே"

—திருவாசகம் 94

18. மெய்யுணர்தலில் வல்ல அனுபூதிமான்களே இறை வனுகிய உன்னை உணர்ந்து அனுபவிப்பார்கள். அத்த கைய ஞானிகள் அறியும்படி எங்கும் நிறைந்து உணர்வு வடிவாகி நீ நிற்கின்றாய்! பொற்குவியல் போன்றவனே! அளவிலா ஞானவாசனை வீசும் மலரே! புண்ணிய நன்னீரே! புத்தமிழ்தமே! மெய்ஞ்ஞானமே! எனக்கு எளியனாய் வந்த ருள்புரிவாயாக! நெருப்பே! வானே! காற்றே! நிலமே! ஆகிய ஐம்பூதவடிவாகி நிற்கும் இறைவா வருவாய்!

ஒப்புமைப்பகுதி

"உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே"

—திருவாசகம் (389)

19. செஞ்சடையில் வைத்துக் கங்கையாற்றைப் பாயச் செய்யும் செம்மாணிக்கமே! வருவாயாக! என் கண்மணியுள் பாவையே! முழுமதியே! செந்தாமரையே! பல வேதங்களின் உச்சியில் வைத்துத் தேவர்கள் உள்ளிட்ட பதினெண் கணங்களும் போற்றும் தேற்றத் தெளிவே! பிறவிப் பெருங்

கடலைக் கடக்கத் துணைசெய்யும் தோணியே! என்னை ஆள்வாய்! பகீரதன் வேண்டிய வரத்திற்கேற்பக் கங்கையைச் சடையில் தாங்கிப் பாயச் செய்து உய்தியடையாமற்கிடந்த அவன் முன்னோரை நரகிலிருந்து காத்தாண்டாய்!

ஒப்புமைப்பகுதி

"கண்ணே! கண்ணிற் கருமணியே! மணியாடு பாவாய்!
காவாய்!"

—திருநாவுக்கரசர் தேவாரம் (6:47:1)

"செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே"

—திருவாசகம் (30).

"துன்பக் கடலிடைத் தோணித்தொழில்பூண்ட
தொண்டர்தம்மை
இன்பக்கரை முகந்தேற்றுந் திறத்தன...ஐயாறன்
அடித்தலமே"

—திருநாவுக்கரசர் தேவாரம் (4:92:6).

20. கருமை மிகுந்த கயல்மீன் போன்ற கண்களையுடைய மகளிர் வீசுகின்ற கண்வலையில் சிக்கி வீணாக அழியாதிருப்பவர் யார்? இது நீ அறியாத ஒன்று? உழவுமாட்டில் ஏறும் உருத்திரனும் நீண்டுவளர்ந்த திருமாலும் உன் உருவத்தின் ஒருசிறு பகுதியைக் கூடக் காணார்! உன்னைக் காணும் வண்ணம் நமக்கு உன் அருளாகிய இன்னமுதத்தைத் தந்தருள மாட்டாயா பெருமானே!

ஒப்புமைப்பகுதி

"வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந்தேனை விடுதிகண்டாய்"

—திருவாசகம் (144).

"பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறுசோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

—திருவாசகம் (215).

ஏரேறுபிரான் : ஏர் : உழவுமாடு (Lexicon) இங்கு அதனையேறும் உருத்திரன். பிரமா விட்டுணுக்கள் அல்லாமல் உருத்திரனும் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானைக் காணான் என்பது சைவசித்தாந்த தத்துவ முடிவு. மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டவன் சிவபிரான்.

"மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்" என்பது திருவாசகம் (373).

பதிகம் மூன்று

21. எங்கும் நீக்கமற நிறைந்து, ஈடிணையற்று, தேவர்கள் இன்புறுதற்குக் காரணமாயிருக்கும் ஞானப் பேரொளியே! சீறி எழுகின்ற பிறவிப் பெருங்கடலில் மூழ்கித் தவிக்காதவண்ணம் உன் திருவருளைத் தருவாய்! திருச்சடையில் திங்களைச்சூடி அதனை வாழவைக்கும் தெய்வத் தன்மையுள்ள பேரொளிமயமான பேரின்பக் கடவுளே! பொற்கொடியே! ஆபத்துக் காலத்தில் நம்மைத் தடுத்து ஆட்கொண்டருள்புரியும் அருட்செல்வமே!

ஒப்புமைப்பகுதி

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" —திருக்குறள்

"தேசோமயானந்தம்" என்ற தலைப்பின்கீழ்க் காணப்படும் தாயுமானவ சுவாமிகளின் பதினொரு பாடல்கள் கொண்ட பகுதி, இறைவனைத் "தேசோமயானந்தமே!" என விளிக்கிறது.

22. நெருப்பே! நெருப்பை ஒத்த நிறத் திருமேனியில் நீறு பூத்தாற்போல் வெண்ணீறணிந்து அவ்வெண்ணீற்றொளியுடன் தலையிற்சூடிய திங்களின் வெண்ணிலவும் கலந்து திகழும்படி இருந்த நீதான், நரகக்கடலில் மூழ்கிக் கிடவாமல் என்னைக் காத்தருள் புரிதல் வேண்டும்! தீவண்ணனாகிய உன்னை நினைந்து காயும் கனியும் அருந்திப் புனல் பருகி உள்ளம் உருகிக் கண்ணீர் சொரியும் மெய்யடியார்களுக்கு

இப்பூமியில் பேரின்பப் பெருவாழ்வைத் தந்தருள்கின்ற பெருந்தீப்பிழம்பே!

ஒப்புமைப்பகுதி

"புற்று மாய்மர மாய்ப்புனல் **காலே**
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன!... ... ..." —திருவாசகம் (397).

23. தீச்சுடரே! ஒளிகாலும் மேனிகளையுடைய தேவர்களால் சூழப்பட்டிருக்கும் காமதேனுவே! சுடர் சூழ்ந்த கடல் போன்றவனே! திங்களும் கங்கையும் படமெடுத்தாடும் பாம்புகளும் தங்கி வாழ்கின்ற, வீசும் சாமரைபோன்ற விரிசடைக் கடவுளே! உயிர்களைக் காக்க நஞ்சினை உண்டு அமிழ்தம் வழங்கிய உன் திருநீலகண்டத்தின் தியாகத்தையும் அழகினையும் காணாது இருப்பேனாகில் இந்நிலவுலகில் நான் வாழ்ந்திருந்து என்ன பயன்? மறையாகிய சொன்மாலை பயில்கின்ற, திருக்கொன்றைப் பூங்குயிலே!

ஒப்புமைப்பகுதி

"...புவனங்கள் உய்ய ஐயர் பொங்குநஞ் சுண்ண
யாம்செய்
தவநின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த
தென்று
சிவன் எந்தை கண்டம் தன்னைத் "திருநீலகண்டம்"
என்பார்" —திருநீலகண்டநாயனார்: 4.

24. குயில் மொழியும் தென்னங் குரும்பையொத்த முலைகளுங்கொண்ட உமையம்மையுடன் கண்ணும் மணியும் போல் களிநடம் புரிகின்ற தெய்வமே! மயிலேறும் மைந்தனாகிய முருகன் மொழிந்த ஓங்காரப் பொருளை இரு செவி குளிரக் கேட்டு மேனிசிலிர்த்த தந்தையே! அங்கயற்கண்ணியாகிய மீனாட்சியின் மூக்கண்கள் போன்று, ஞாயிறும் திங்களும் நெருப்புமாகிய உன் முக்கண்களையும் ஒளிரும் பாம்பையும் கங்கையையும் செஞ்சடை முடியையும் காட்டிப் புலால் விரும்பும் நாய்போன்ற எனக்கு இப்புவியில் காட்சி தருவீர்.

ஒப்புமைப்பகுதி

"பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்வேதமும்
பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவது
இதுவே"
—திருஞானசம்பந்தர் தேவாரம் 3:120:1

அம்மைக்கு முக்கண் —பரிபாடல் 11:99-100

"இமையாத முக்கண் மூவரில் பெற்றவர் சிற்றம்பலம்"
—திருக்கோவையார் 14.

புலைநாயினேற்கு : "புலைநாயேன்" என்ற சொல்லாட்சி திருவாசகத்தில் (488) உள்ளது.

25. பற்றற்றுத் துயிலும் கடலே! ஐம்புலன்களின்றி அவை செயற்படும் வாயில்களாகிய ஐம்பொறிகளுமின்றிப் பொறிபுலன்களின் வாயிலாக அறிவுபெருமல், சுயமாக எல்லாம் அறிபவனுயிருந்து அப்பொறிபுலன்களின்றியே முழுமைஞானத்தை அருளிய தெய்வமே! இவ்வுலகத்திலே உடல், உயிர், உள்ளம் ஆகியவற்றில் ஒருங்கே இடங் கொள்ளும் ஆசைவெப்பம் ஒழிந்த நிலையினை அடையப்பெற் றுக் குற்றமற்ற தன்மை எய்தி, நான் அலங்கோலமாகப் போகாதவாறு, பொங்கிய அக்கொதிப்பு அடங்கிச் செயலற் றுப்போகத் திருவருள் புரிவாய்!

ஒப்புமைப்பகுதி

நிருபாதிகை நித்திரைக் கடலே! : இறைவனை விளித்தது.

"அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே"
—திருவாசகம் (367).

போதம் புகன்ற புத்தேள் : தட்சணாமூர்த்தி.

"நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ..."
—திருவாசகம் (270).

26. வாயில்லாத குடம்போல, எல்லையற்ற எவ்வக் கடலின் போக்கில் அங்குமிங்கும் அலைந்து, நாய்கள் தின்று பிணமாகிக் கழியும் சாக்காடாகிய போக்கும், பிறவியாகிய வரவுமாயிருக்கின்ற வாழ்வுக்கூத்தாட்டில் பிறவிதோறும் திரியாமல் திருவருள் புரிவாய். பாயும் மான்மறியும் மழுவும் படம்விரித்தாடும் பாம்பும் செஞ்சடைக் கூவல் இளம்பிறையும் ஆகிய உன்னைச் சேர்ந்த எல்லாவற்றையும் உன் திருவடியிணைகளையும் அடியோம் அடைக்கலமாக அடைகிறோம்.

ஒப்புமைப்பகுதி

வாயில்குடம் :

"ஊமைத்தசும்புள் நீர் நிறைந்தாற்போல"

—திருமுருகாற்றுப்படை 111-113 நச்சினார்க்கினியர்.

"குவிவாய் அமையாக் குடம்நிறை தீநீர்"

—ஞானமிர்தம் 47.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு" என்பது திருவாசகம் (31)

நட்டம் : "ஊன நாடகம்" என்பது திருவாசகம் (99)
"ஊன நடனம்" என்பது
திருவருட்பயன் -9:3.

இப்பாடலில் இடம்பெறும் பின்னிரு அடிகளும்,

"அரவும் அலைபுனலும் இளமதியும் நகுதலையும்
விரவும் சடையடிகட்கிடம் விரிநீர் வியலூரே"

என்ற ஞானசம்பந்தர் தேவாரப்பகுதியை (1:13:1) ஒத்துள்ளன.

27. முன்னொருகாலத்தில் இமயமலையை வில்லாக வளைத்து வாசுகிப்பாம்பை நாணாகப் பூட்டி எரிமுகப் பேரம்பு ஒன்றினால் வெள்ளி, பொன், இரும்பு முதலியவற்றால் ஆகிய முப்புரங்களை, அப்புரவாயில்களில் பேரொலி எழும்படி எரித்து அழித்த சிவபிரானே ! செம்மேனியனே ! வானோர் முதல்வனாகிய நீ எங்களுக்குத் தலைவனாக நிலவுலகிலும்

தில்லைச்சிற்றம்பலமாகிய பொதுவில் நின்று ஐந்தொழில் கூத்தாடுகிறாய்! அக்கூத்தைத் தரிசித்து வாழ்த்தி வணங்காமல், கடலில் அலைபோல் இப்புவி மாயையில் சிக்கித் துன்புற்று அழிகின்றேன் புலைநாயேன்.

ஒப்புமைப்பகுதி

"கல்லால் நிழற்கீழாய் இடர்காவாய் என வானோர்
எல்லாம் ஒருதேராய் அயன்மறைபூட்டி நின்றுய்ப்ப
வல்லாயெரிகாற்றீர்க் கரிகோல் வாசுகி நாண் கல்
வில்லால் எயில்எய்தான் இடம் வீழிம்மிழலையே"

—சம்பந்தர் தேவாரம் 1:11:6.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்"

—கலித்தொகை 38.

28. செக்கர்வான்போல் சிவந்தமேனியனாகிய சிவபெருமானே! அனைத்தும் அழிந்த நிலையில் நீமட்டும் அழிவின்றி நிற்பாய் என்பதற்கு அடையாளமாக அழிந்த உயிர்வர்க்கங்களின் தலையோடுகளையே மாலையாக அணிந்து அவ்வுயிர் வர்க்கங்களின் நல்வினை தீவினைகளுக்கேற்ப அவைகட்குப் பயனளித்துச் செங்கோல் செலுத்தி அருளாட்சி புரிந்து இனிவரும் பிறவிகளை வேரறுத்து உன் திருமந்திரமாகிய திருவைந்தெழுத்தினை உருவேற்றும் மெய்யடியார்களிடமிருந்து யான் எனது என்னும் செருக்குகளை அம்மந்திரச் செம்மையால் போக்கியருள்வாய்! சுடுகாட்டில் வாழும் கடவுளாகிய பெம்மான் பித்தன் என்றெல்லாம் பெரியோர் பெயரிட்டு அழைக்க நிற்பாய்! இம்மானிட வீடாகிய உடலால் விளையும் வருத்தங்களிலிருந்து விடுபட்டு உய்யும்நெறி எவ்வாறு? நீயே அதைச் சொல்லித்தரவேண்டும்.

ஒப்புமைப்பகுதி

செம்மேனிச் சிவபெருமான் :

"சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி
எம்மான்"

என்பது அப்பர் தேவாரம் (4:112:9).

சிரமாலை :

"தலைக்குத் தலைமாலை அணிந்ததென்னே" என்பது சுந்தரரின் திருவஞ்சைக்களத் தேவாரம் (7:4:1).

பெம்மான் பிணக்காடன் என்றும் பெரும்பித்தன் என்றும் பெரியோர் பெயரிட்டு :

"தோடுடைய செவியன் விடையேறி
ஓர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர்
கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த
அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய **பெம்மான்** இவனன்றே"

என்பது சம்பந்தர் தேவாரம் (1:1:1):

"பித்தா ! பிறைசூடீ ! பெருமானே ! அருளாளா !"
என்பது சுந்தரர் தேவாரம் (7:1:1).

"ஊர்ச்சுடுகாட்டு எரிப்பிச்சன்" என்பது
திருவாசகம் (153).

மானிடவீடு : "அருட்பெருந் தீயின் அடியோம்
அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்"
என்பது திருவாசகம் (3:160-161).

29. இயம்பப்படுகின்ற சொல்லும் பொருளும் பற்றிய அறிவு சிறிதேனும் இல்லாதிருக்கின்ற அதிசயப்பிறவியாகிய நான், பலரும் அறியப்படும் நிலை எய்தியது எவ்வாறு? மதியில், நான் கண்டறியாதன கண்டது எதனால் விளைந்ததோ? பொறிபுலன்களை வெல்லும்வகை அமைவது எப்படி? செம்பொன்போல் ஒளிவீசும் எங்கள் சோதியே! என் மயக்கத்தை வேரறுக்கும் உன் கருணைக்கு நான் எவ்வாறு கைம்மாறு செய்வேன்! கருணைக்கடலே! தகுதியற்றுத் தனியனாய் நிற்கும் என்னைக் காப்பாற்று!

ஒப்புமைப்பகுதி

வெளிவானதெங்ஙன் :

"கட்டறுத்தெனை ஆண்டு கண்ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை !
எட்டினோடிரண்டும் அறியேனையே"

—திருவாசகம் (53).

செம்பொற்சோதியே: திருநாவுக்கரசரின் திருவையாற்றுத் தேவாரப்பதிகப் பாடல்தோறும் (6:38) "திருவையாறகலாத செம்பொற்சோதீ" என்று இச்சொல்லாட்சி இடம்பெறுகிறது. "பொன்னார் மேனியனே" என்பது சுந்தரர் தேவாரம் (7:24:1).

தமியேன் : "இரண்டுமிலித் தனியனேன்" என்பது திருவாசகம் (30).

என் மயரறுக்கும் தயைக்கு என்ன கைமாறு செய்வேன்:

"என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர் கைம்மாறு" என்பது

திருவாசகம் (387).

30. தனியனாகிய நான் தவம்செய்து ஒழுகும் நெறி அறியவில்லை. தில்லைச் சிற்சபையில் நின்றாடும் நாயகராகிய உம் திருமுன்னர் தினமும் தலைகவிழ்ந்து வணங்கவில்லை; கழலடியைத் தரிசித்துக் கைதொழுது கடைக்கண்களில் நீர் பெருக உள்ளம் உருகவுமில்லை; நவிலப்படும் பாமாலை தொடுத்தும் அணிந்தேனில்லை. சொல் ஆற்றல் மிக்க நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமயகுரவர் நால்வரும் வழிபட்ட உம் திருவடிகளை வணங்குவதற்காகவே என்னை மானிடனாக வகுத்தீர்! புலைநாயேன் உய்தியடையும்வகை எவ்வாறு என்று எனக்குப் புகல்வீர்.

ஒப்புமைப்பகுதி

இப்பாடல் பின்வரும் திருவாசக அமைப்பை ஒத்துள்ளது:

"ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின்திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே" (18)

திருவடிக்கு, புவிமீது எனையே வகுத்தாய்:

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"
—அப்பர் தேவாரம் (5:90:7)

"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து"
—திருவாசகம் (281)

"தன் ஈரடிக்கு என்னிரண்டு கரங்கள் தந்தான்"
—திருக்கோவையார் (86)

பதிகங்கள் இரண்டும் மூன்றும் அந்தாதித்தொடையில் அமைந்தவை.

பதிகம் நான்கு

31. அறிபவன், அறிவு, அறிபொருள் ஆகிய மூன்நிலைகளும் அற்றுப் பற்றற்ற துறவுநிலையெய்தித் தலயாத்திரைகள் செய்யும் ஞானியர் தம் உள்ளங்களைப் பலியாக அர்ப்பணிக்க, அவ்வுள்ளங்களிலுள்ள குற்றங்களைக் களைந்து தூய்மைப்படுத்தி, தத்துவங்கள் கடந்த முழுமுதற்கடவுளாய் நின்று உயிர்கள்மேல் அன்பு பூண்டு அவற்றின் உய்திக்கு உதவும் திருநீலகண்டனாகிய சிவபிரானே நான் வழிபடுந் தெய்வம்.

ஒப்புமைப்பகுதி

"துள்ளு மறியா மனது பலிகொடுத்தேன்"

—தாயுமானவர்.

"நீலமணிமிடற்று ஒருவன்" —புறநானூறு 91.

"வங்கமேவிய வேலைநஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கண்மேலடராமை யுண்ணென உண்டிருள்
கண்டன்"

—தேவாரம் 7:75:2.

"...சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண்டாய் அமு
துண்ணக் கடையவனே" —திருவாசகம் 154.

32. மூலாதார சக்தியாகிய குண்டலினி முழுமையாக எழுப்பப்படும்போது, நமக்கு அயலதாகிய இப்பூமியிலே மறைந்துநின்று ஆட்டுவிக்கும் மாயையாகிய பாம்பு செயலறும். அந்நிலையில் அதை மேலும் தலையெடுக்கவிடாது பிடித்து அடக்கி, கண்கள் இரண்டையும் மூக்குநுனியில் வைத்துச் செய்யும் தியானயோகம் தடைப்பட்டு ஆத்ம ஞானம் தவறிவிடாதவாறு மீண்டும் நன்னெறியில் நிலை நிறுத்தியது என் தெய்வம்தான்.

ஒப்புமைப்பகுதி

"உலோகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
கலாபேதத்த கடுவிடம் எய்தி
அதில் பெருமாயை எனைப்பல சூழவும்"

—திருவாசகம் 4:56-58.

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான் எனது எனுமாயக்
கடித்தவாயிலே நின்று முன்வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே" —திருவாசகம் 567.

33. வான், மண், நெருப்பு, மலை, காடு, திக்கு ஆகிய வற்றில் நீக்கமற நிறைந்து நின்றாலும் அவற்றைக் கடந்தும் நிற்பதால் அவற்றின் குற்றம் பற்றாமல், வாசனையற்று, சுழன்றுவரும் காலசக்கரத்துட்பட்டுச் செத்துப்பிறக்கின்ற தெய்வங்களைப்போலும் மயக்கமற்று, கதிர்விடும் ஒளியாய் ஞானக்கினியாய், சர்வசங்கார காலத்தில் தான்மட்டும் தனியனாய் நிற்பதால் தன் உளதாம் தன்மைக்குத் தானன்றி வேறு சான்று இல்லாமல், தனக்குப் போதிக்கும் ஆன்மகுரு தனக்கு மேலின்றி ஒப்புமைகள் இல்லாதவனாய் பெருமௌனியாய் வீற்றிருக்கும் என் கண்மணிபோன்ற தெய்வமே.

ஒப்புமைப்பகுதி

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை
கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியுமல்லை இரவல்லை
பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை பிறிதல்லை-
யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை உணர்வரிய
ஒற்றியூருடையகோவே"
—தேவாரம் 6:45:9.

"எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம்"
—திருவாசகம் 321.

"...வடநீழல் ஊடுவளர்
சனகனாதிமுனிவோர்கள்தம்
சொன்மயக்கமது தீர அங்கைகொடு
மோனஞானமது உணர்த்தியே..."
—தாயுமானவர் சிற்சுகோதய விலாசம் : 10.

34. முப்பத்துமுக்கோடி தேவர்கள், பிரமா-விட்டுணு-உருத்திரர் ஆகிய மும்மூர்த்தி பேதங்கள், கானல்நீரில்

பூத்த தாமரைபோலக் கற்பனையாகக் காட்சியளிக்கும் இம்மை–மறுமை ஆகிய மாயைத் தோற்றங்கள், அறிபவன்-அறிவு-அறிபொருள் ஆகிய முப்பொருள்கள், மாயப்பாழ்-சீவப்பாழ்-வியோமப்பாழ் ஆகிய முப்பாழ்கள், சீவன்முத்தி-பரமுத்தி-சிவமுத்தி ஆகிய மும்முத்திகள் : ஆகிய இவை அனைத்திற்கும் முற்பட்ட, முக்கண்களையுடைய தலைமைக் குருவரசாகிய சிவபிரானே என் குலதெய்வம்.

ஒப்புமைப்பகுதி

"மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்
ஆய வியாப்த மெனுமுப்பா ழாம்அந்தத்
தூய சொரூபத்திற் சொல்முடி வாகுமே"

"சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
ஓயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
மூவயின் முச்சொருப முத்திமுப் பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளுநா தாந்தமே" —திருமூலர்.

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"

—திருவாசகம் : 163.

"கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க"

—திருவாசகம் 1 : 3.

35. மொழிக்கும் மனத்திற்கும் உட்படாமல் தனக்கெனக் குறிப்பிட்ட ஒரு வடிவமின்றி ஞானச்சுடர் வடிவு தாங்கிப் பார்க்குமிடமெங்கும் நீக்கமறச் செறிந்து நிறைந்து காட்சிக்கு வியத்தகு ஒன்றாய் உயிரினும் மிக நுண்ணியதாய்த் தான்தோன்றிப் பேரொளியாய் நின்று காக்கும் என் அருளாளனாகிய சிவபிரானே நம் குலதெய்வம்.

ஒப்புமைப்பகுதி

"மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன்"

—திருவாசகம் 1 : 45

"வானுடையான் பெரியான் மனத்தாலு நினைப்பரியான்
ஆனிடை ஐந்தமர்ந்தான் அணுவாகி ஓர் தீயுருக்கொண்
டுனுடை இவ்வுடலம் ஒடுங்கிப் புகுந்தான் பரந்தான்
நானுடை மாடெம்பிரான் நண்ணுமூர் நனிபள்ளியதே"
—தேவாரம் 7:97:3.

"...பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத்தருள் செய்குவாய்
பார்க்கும் இடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணனந்தமே" —தாயுமானவர்,
பரிபூரணனந்தம் : 5.

36. மாயையிலிருந்து உலக தத்துவம் அனைத்தையும் விரிவாகத் தோற்றுவித்து மீளவும் அம்மாயையினுள்ளே அவற்றை ஒடுங்குவித்து இவ்வாருக மாயைக் கலப்பினுல் உலகைச் செயற்படுத்திவரும் சிவபிரானே! தோற்றம் ஒடுக்கமின்றி நித்தியமாய் விறகின்றிச் சுடராய் எரியும் தான்தோன்றியாய் உண்மை, அறிவு, இன்ப வடிவாகத் திகழும் உன் குறைவிலா நிறைசெல்வத்தை நமக்குத் தந்து நம்மையும் சிவமாக்கி அருள்புரிவாய்.

ஒப்புமைப்பகுதி

"விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்..." —திருவாசகம் 100.

"விறகில் தீயினன் பாலில்படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்..."
—தேவாரம் 5:90:10.

"...சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்"
—திருவாசகம் 648.

37. பிரமத்தின் உண்மை இயல்பினை தம் பிரமை கொண்டு பேதப்படுத்தி முன்வினைப்பயனுல், யானையைத் தடவிக் கண்டறிந்த குருடர்போல் தாம் பிடித்ததே சரி என நினைத்து இது அன்று இது என்று ஒன்றென்ருக உலகப்

பற்றில் மயங்கிநின்று மேலும் வினைசெய்துகொண்டே செல்கின்றனர். முற்பிறப்பில் செய்த வினையை இப்பிறப்பில் அனுபவித்து முடிப்பதோடு நிற்காமல், இனிப்பிறப்பதற்கு ஏதுவாக வினைகளை இப்பிறப்பில் மேலும் மேலும் செய்யும் இவர்கள் கதி என்னவாகுமோ? அருட்பெருங் கடலாகிய நீதான் இவர்கள் மேல் அருள்பாலிக்கவேண்டும்.

ஒப்புமைப்பகுதி

எந்து: (என்ன) மலையாள வழக்கு

"அது எந்துவே என்றருளாயே"

—திருவாசகம் **456-464.**

38. 'எல்லாம் அவன்செயல்' என்று இருக்கும் எம்மேல் எளிவந்து அருள்புரிந்து, மௌனியாய்ச் சனகாதி நால்வருக்கும் சின்முத்திரை காட்டிச் சொல்லாமற் சொல்லிய வீடுபேற்றின் நுட்பப்பொருளை எமக்கும் உணர்த்தி அவ்வுபதேசத்தின்மூலம், எம்மை நாமே பலிகொடுப்பதுபோல் பெருவெளியில் சுழலும் பல்கோடி உலகங்களில் பிறந்து இறந்து உழலாதபடி மறுபிறப்பிலிருந்து விடுதலை நல்கித் தடுத்தாட்கொள்வாயோ சிவதெய்வமே!

ஒப்புமைப்பகுதி

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய
ஆத்தர் மொழி" —தாயுமானவர்.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கைவெல்வாம்"

—பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்.

39. முத்தியருளும் இன்பக்கடலாய்த் திகழும் இறைவ ஞகிய சிவபிரானே ! உன்னிலிருந்து தனித்து வேருயிருக் கும் இருமை நிலையிலிருந்துகொண்டு உன்னைப் பிரிந்திருக் கும் என் பிறவித்துயரை ஒழிக்கும்படி எப்போதும் சொல்லி அழுது கைகூப்பித் தொழுது நிற்கும் உயிராகிய எனக்கு, "எல்லாம் நான் நான்" என்று எங்கும் நிறை உன் தன் மையை அறிவுறுத்தி என்னிடம் ஆத்மஞானத்தை வர வழைத்தாய்; அதனோடு அமையாது என்னை உன்னோடு கலக்கச் செய்து நீயும் நானும் இரண்டறக்கலந்த அந்நிலை யில் பிறவித்துன்பம் அறும் எனவும் உணர்த்தியருளினுய்.

ஒப்புமைப்பகுதி

"கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா
ணம்மாஞய்"

—திருவாசகம் 180.

"எல்லாம் நான் நான்" என "எப்பொருளும் தாஞயிருக்கின்ற படியைக் காட்டி"க் கண்ணன் ஸ்ரீகீதை அருளிச் செய்ததும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது (ஸ்ரீகீதை : 10 & 11, மதுரைக்-காஞ்சி : 763, நச்சினர்க்கினியர்).

"அறவே பெற்றார் நின்னன்பர்
அந்தம் இன்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே" —திருவாசகம் 488.

40. முழுமையான சத்தாய் அசத்தின் சுவடுகூட இல்லாமல், தொன்றுதொடடுவரும் ஊழ்வினைக் காரணம் பற்ருமல் பிறப்பற்று, செயல்பற்றிய நினைவளவும் இன்றி, மனம் ஒருநிலைப்படும் தாரணையின் நீங்கி, தத் த்வம் அஸி என்ற மறைமொழியின அத்துவிதப் பொருள்தரும் மந்திரத்தை முழங்கி ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதிவடிவாய் நிற்கும் என் தெய்வம்.

ஒப்புமைப்பகுதி

"...அதுவென்றும் நீயென்றும் ஆனுயென்றுங் கூறும்
பதங்களாம் அவை பரமுஞ் சீவனும் அவ்விரண்டும்
ஒன்ருதலும்"

—தொல்காப்பியம். கற்பியல்-47. நச்சினுர்க்கினியர்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி"

—திருவாசகம்.

பதிகம் ஐந்து

41. சுட்டியறியப்படும் பொருள் என்று சொன்னல், சடமாய் அழிந்துபோகும் என்ற தடைதோன்றும் (ஒன்ருலும் அறியப்படாத பொருளாகில் சூனியமாம்; எனவே பரம் பொருள் சித்தொடு சத்தாய் நிற்கும்). உள்பொருளாய் (சத்து) நின்றதென்று சொன்னல், என்ரே ஒருநாள் இல்பொருளாயிருந்து புதிதாய் உண்டாயபொருள் என்ற தடை அங்கே வந்து சேரும் (எனவே அழிவிலா அறிவுப்பொருளாகவும் என்றும் உள்பொருளாகவும் இறைவன் உளன்). முற்ருய் நம் உள்ளம் குளிரச்செய்த இன்பம் என்று அவனைக் கூறிஞல் நீக்கமற நிறைந்துநிற்கும் அவன் தன்மை, துக்கத்தில்மட்டும் இல்லையா என்று மறுப்பு எழும். இத்தகைய குறைபாடுகளுக்கு இடமின்றி இவற்றையெல்லாம் கடந்து ஒப்பற்ற ஒரு தனிப்பொருளாயிருக்கும் தெய்வம், நம் வழிபாட்டிற்கு உள்ளதாயிருக்கின்றது.

ஒப்புமைப்பகுதி

"அறிவுறும் பொருளோ ஈசன் அறிவுறு தவனே
என்னின்
அறிபொருள் அசித்து அசத்தாம்; அறியாதது இன்ரும்
எங்குஞ்
செறிசிவம் இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய்
நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே"
—சிவஞான சித்தியார் 6 : 1.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி **உண்மையுமாய் இன்மையுமாய்க்**
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே"
—திருவாசகம் : 19.

"கூறு நாவே முதலாகக்
கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதுநீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கில்
தேறும் வகையென் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ"
—திருவாசகம் : 498.

"குறைவிலா நிறைவே ! கோதிலா அமுதே!"
—திருவாசகம் : 390.

42. சித்து, சடம் ஆகிய நிலைகள் அற்று, நீக்கமற நிறைந்து நின்று, சதசத்தாகிய உயிருமல்லாமல், பற்பல காட்சிகளால் வரும் குற்றங்களற்று இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனுதலால், பந்தமும் அதனின் நீங்கி எய்தும் வீடுபேறுமற்றுக் கற்கண்டின் தித்திப்பைப்போல மெய்யடியார் உள்ளங்கவர் கள்வனுய் நிற்கும் தெய்வம் என்றும் நம் வழிபாட்டிற்கு உள்ளதாயிருக்கின்றது.

ஒப்புமைப்பகுதி

"சத்(து)அசத்தைச் சாரா(து) அசத்(து) அறியா(து)
அங்கண் இவை
உய்த்தல்சத சத்தாம் உயிர்" —திருவருட்பயன்.

"பந்தமும் வீடும் படைப்போன் காண்க"
—திருவாசகம் 3 : 52.

"கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"
—சிவபுராணம் 46-48.

"என் உள்ளங் கவர் கள்வன்" —தேவாரம் 1 : 1.

"பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே" —தாயுமானவர்.

43. பரம்பொருள் என ஒரு பொருளில்லை என்று சொன்னால் இல்லையென்று சொன்ன அக்கூற்றாலே அப்பொருளுண்டு என்பது பெறப்பட்டு அக்கூற்றின்கண் குற்றம் ஏற்பட்டுவிடும். அதுவுமல்லாமல் தனிக்குன்று என்று கூறினால் குன்றின் அடியிலுள்ள பள்ளத்தாக்கும் உடன் தோன்றும். நேரடியாக வளர்ச்சி எனக் குறிப்பிட்டால் குன்றலும் புலப்படாமற் போகாது. காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்களை அடியார்களிடமிருந்து நீக்கி அவர்கள் உள்ளத்தைத் தன்பால் ஈர்த்து ஆட்கொண்ட, சடையழகாகிய தலைக்கோலமுடைய சிவபிரானின் திருவிளையாடல்களைக் காலகாலமாகக் கண்டு வியந்துகொண்டிருக்கிறது இவ்வுலகம.

ஒப்புமைப்பகுதி

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே'' —திருவாசகம் 392.

''ஒன்பது போலவர் கோலக் குழற்சடை''
—தேவாரம் 4:18:9.

''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க''
—திருவாசகம் 1 : 7.

''ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே''
—திருவாசகம் 1 : 74.

''...ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி...''
—திருவாசகம் 166.

44. இப்போது இயலும் கணத்தில் இருத்தல் குற்றம். எதிர்கணத்தில் இருப்பது மூலப்பொருள் அல்ல. இவ்விரு கணத்திலும் இல்லையெனில் பின்னர் மூன்றும் கணத்தில் முடிவு யாதாய் முடியுமோ? ஒருகாலத்தில் ஒன்றின் மேலுள்ள விருப்பு, இன்னொரு காலத்தில் இன்னொன்றின் மேல் கடும் வெறுப்பாய் மாறிவிடுகிறது. காலந்தோறும் ஏற்படும் இம்மாற்றங்களில் அகப்பட்டு பிரமா விட்டுணு உருத்திரன் ஆகிய மூவரும் அழிந்துபடுவர்.

ஒப்புமைப்பகுதி

''நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே
ஏறுகங்கைமணல் எண்ணில் இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே'' —தேவாரம் 5:100:3.

''சாவமுன்னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று
நஞ்சமஞ்சி
ஆவ எந்தாய் என்று அவிதாவிடு நம்மவரவரே

மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணுண்டு
மண்மேல்
தேவரென்றே இறுமாந்தென்ன பாவந் திரிதவரே''
—திருவாசகம் 8.

"தேவர்கோ அறியாத தேவதேவன்
செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை''
—திருவாசகம் 34.

45. பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரன் சதா சிவன் ஆகிய பஞ்சகர்த்தாக்களையும், காலச்சுழற்சியில் செத்துப் பிறந்து உழலும் சிறு தெய்வங்களைக்கண்டு கைகூப்பி நிற்கும் எல்லாவுலகங்களையும், தன் திருவிளையாடலில் தோன்றவைத்து ஒடுங்கச் செய்து தன் அருவுருவத் திரு மேனியாம் சிவலிங்கத்தை ஆவுடையாருள் நிறுவி அட்ட பந்தன மெழுகு இளகாதவாறு கெட்டிப்படுத்தி அச்சிவ லிங்கத்தில் தலையாய கடவுளாகிய தன்னை அனைவரும் வழி பட்டு வரும்படி செய்தது என் சிவபரம்பொருள்.

ஒப்புமைப்பகுதி

"...சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்''
—தேவாரம் 6:98:5.

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப்பாறைகட் கேறுமோ
அத்தனென் றரியோடு பிரமனுந்
துத்தியஞ் செயநின்ற நற்சோதியே''
—தேவாரம் 5:100:2.

"செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்குந்தேடி திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே''
—தேவாரம் 5:95:11.

ஆன்மதத்துவத்தில் பிரமாவும், வித்யாதத்துவத்தில் விட்டுணுவும் சுத்தவித்தையில் உருத்திரனும் ஈசுவரத்தில் மகேசுவரனும் சாதாக்கியத்தில் சதாசிவனும் பரமசிவனின் திருவருளால் அதிகாரம் செலுத்துவோர்.

46. தனித்தனியான அவா ஐந்தும் வெறும் அறிவில் பொருள்களாகிய ஐம்பொறிகளைச் சேரும்போது உயிர்கள் நன்மை தீமை இரண்டையும் மாறிமாறிச் செய்து இருவினையிருளில் மூழ்கிக் கிடக்கும். அப்போது இவ்வுலகம் மேலுலகம் எங்கும் நீக்கமற நிறைந்துநிற்கும், அறிவுக்கெட்டாத கடவுட் சூரியன் எழில்வளர் அருட்பெருஞ்சோதி பரப்பி, உயிர்களிடம் மண்டிக்கிடக்கும் இருவினையிருளைக் கோலிப் பருகி அகற்றி, வெளிப்படையாய் நிலைபெற்றுத் தோன்றும்.

ஒப்புமைப்பகுதி

"...இருளே! வெளியே! இகபரம்
ஆகி இருந்தவனே" —திருவாசகம் 121.

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து" —திருவருட்பயன் 1.

"ஏற்ரூர் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கன்(று)
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்"
—திருவாசகம் 3:158–161.

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்..."
திருவாசகம் 392.

"அகலிரு விசும்பில் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி"
—பெரும்பாணாற்றுப்படை 1–2.

47. தடைசெய்யும் ஐம்புலன்கள், ஐம்பொறிகள் வாயிலாகப் புகாமல் செயலற, கூறுதற்கரிய முன்வினையும்

அதன் விளைவாகவரும் பிறப்புமாகிய காரணகாரியத் தொடர்ச்சியற்றுப் போகும்படி மனம் இரண்டுபடுதலைத் தவிர்த்து, நிறையருட்பெருஞ்சோதியில், வினைகளை நுகரப் பிறந்த சீவான்மாவின் மாசு அகன்று, அழகும் தெய்வத் தன்மையுமுடையதாய் உலகிற்கு ஒளியாய் நின்றிலங்கும் அச்சிவப்பேரொளியில் சிந்தையைக் காணிக்கையாகக் கொடுத்து அதன் வயப்பட்டு நிற்பேன்.

ஒப்புமைப்பகுதி

"மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி..."

—திருவாசகம் 1:54–58.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்" —திருக்குறள்.

"இல்லகவிளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங்காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே" —தேவாரம் 4:11:8.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

—திருமந்திரம்.

48. என்ருே ஒருநாள் நம்மைக் கைவிடப்போகும் இவ்வுடல் நிலையாமையுடையது. தெய்வீக இன்பமுள்ள திருவருளாம் அமிழ்தத் தெளிவில் ஆத்மீகவிடாய் தீர மூழ்கிப் பருகிக் கருவி காரியச் சார்பு இல்லாமற் போகும்படிக்கு, உலகத்தனித் தலைவனுகிய சிவபிரான், தன் திருமேனியின் இடப்பாகத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பச்சைப்

பசுங்கொடி போன்ற உமையம்மையுடன் என்று நம்பால் வந்து அருள்புரிவானே !

ஒப்புமைப்பகுதி

"புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் **அலர்ந்தமெய்க் கருணையும்** நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதேபள்ளி எழுந்தரு ளாயே"

—திருவாசகம் 375.

"நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும் தாழ்சடையோன்
ஆண்டிலனேல்..."

—திருவாசகம் 229.

49. ஐம்புலப் பறவைகளுக்கு இரையாகவோ, அன்றிப் பரந்துபட்ட இப்பாழ்நிலமாகிய மனப்புன்செய்யில் தோன்றும் துன்பக் களைகளைக் கொய்து, அம்மனத்தில் வளரும் ஐம்புலன்களால் குடிக்களஞ்சியம்போல விளைந்த உணவு முதலான சிற்றின்பங்களை நுகர்வதற்கோ, அருளின் வற்றா ஊற்றாகத் திகழும் கடவுளாகிய நீ, உயிராகிய என்னை இவ்வுடலில் குடியேற்றி வைத்தாய்! தனியனாய் நின்று தளர்ந்து வருந்தும் நான் உன் திருவடியிணைகளையே அடைக்கலமாக அடைகிறேன்.

ஒப்புமைப்பகுதி

"உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட **இந்திரியப் பறவை** இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ"

—திருவாசகம் 326.

"கால்கொடுத்திரு கையேற்றிக் கழிநிரைத்திறைச்சி
மேய்ந்து
தோல்படுத்துதிரநீராற் சுவரெடுத்திரண்டுவாசல்
ஏல்வுடைத்தா வமைத்தங்கேழு சாலேகம்பண்ணி
மால்கொடுத்தாவிவைத்தார் மாமறைக்காடனுரே"

—தேவாரம் 4:33:4.

"...போற்றியோ நமச்சிவாய புகலிடம்
பிறிதொன்றில்லை..."

—திருவாசகம் 66.

"...விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்க முந்நீர் நஞ்சு அமுதுசெய்தாய் கருணாகரனே..."

—திருவாசகம் 132.

50. எந்தக் கணத்தில் எதிராவார் யாருமில்லாக் கூற்றுவன் தன் பாசத்தால் நம்மைக் கட்டியிழுப்பானோ, அந்தக் கணத்தில் சிவஞானப்பேரொளி பரவப்பெற்று யான் எனது என்னும் செருக்கற்று, பதினெண்கணங்களுக்கும் எட்டா நிலையிலிருக்கும் தனக்குவமையில்லாச் சிவபரம்பொருளின் நறுமணங் கமழும் திருவடித்தாமரைகள் இரண்டுமே நமக்குப் புகலிடம்.

ஒப்புமைப்பகுதி

"...சீற்றங் கொண்டென்மேற் சிவந்ததொர் பாசத்தால்
வீசியவெங்
கூற்றங் கண்டும்மை மறக்கினும் என்னைக்
குறிக்கொண்மினே"

—தேவாரம் 4:95:7.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள்செய்வான்
அமருங்கோயில்

வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழைஎன்று
அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே''
—தேவாரம் 1:130:1.

"...பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீரறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே''
—புறநானூறு 1.

"தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்து காத்து அழிக்கும்
மற்றை
மூவர்கோனய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை''
—திருவாசகம் 34.

சொல்லகராதி

(எண் : பாடல் எண்)

அறியேன் 10.
அறிவார் 18.
அறுக்கும் = தீர்க்கும் 29.
அறுப்போன் 28.
அறும் = தீரும் 39.
அன்பர் 42.
அன்று = அல்லாதது 3.
அந்தநாள் 7.
அனல் = தீ 4, 11.
அனுக்கிரகம் = அருள் 26.
அனைத்தும் = எல்லாம் 41.
ஆ = பசு 11.
ஆக்குமம் = ஆன்மா 35.
ஆக்கை 2.
ஆகாது 25.
ஆகி 11, 25.
ஆட்கொள்வாய் 21.
ஆடும் 24.
ஆண்டு = ஆட்சிசெய்து 13.
ஆத்மா 32.
ஆதாரம் 32.
ஆதி = முதல் 1, 11.
ஆம் = ஆகும் 1.
ஆமோதம் = மகிழ்ச்சி 12.
ஆய் = ஆகி 3, 4, 5, 6.
ஆய்விடும் 1.
ஆயம் = இலாபம் 11.
ஆயிரம் 38.
ஆயின் = ஆனால் 23.
ஆர் = யார் 20.
நிறைந்த 1, 5.
ஆவி = உயிர் 2.
ஆவேசர்கள் = வெறி
யுள்ளார் 14.
ஆள்வாய் 2, 5, 6, 16.
ஆளும் 8, 12.
ஆறு = நதி 15.
ஆனந்தம் 36.
ஆனார் = ஆயினார் 14.
இ 28.
இகம் 3.
இங்கு = இவ்விடம் 26.
இட்டு = வைத்து 28.
இடம் = இடப்பக்கம் 6.
இடையில் 2.
இணை 50.
இந்த 12.
இமையாதவர் = தேவர் 21.
இயம்பாய் = சொல்வாய் 28.
இயம்பும் 29.
இயல் 8.
இரண்டு 50.
இருக்கு 29.
இருக்குகை 44.
இருக்கும் 23.
இருள் 3.
இல்லை 13.
இலங்கி = விளங்கி 42.
இலங்கும் 18.
இலா = இல்லாத 1, 8.
இலேன் 30.
இளகாது 45.
இறை = சிறிதும் 29.
இன்பு 21.
இன்றிய = இல்லாத 18.
இன்று = இல்லாதது 3.
இன்று = இந்நாள் 7.
இனி 6.
இனும் = இன்னும் 4, 6.

ஆசிரியரின் பிற நூற்கள்

தொல்காப்பியம்	(மலையாளம்)
தமிழ்மொழிச்சசிந்தனைகள்	(தமிழ்)
நன்னூல்	(மலையாளம்)
லீலாதிலகம்	(தமிழ்)
Grammar of AinkuRunuuRu. with index	
கேரள பாணினீயம்	(தமிழ்)
வீரசோழியம்	(மலையாளம்)